எனது இல:பிஎஸ்/எஸ்பி/எஸ்பீ/01/சுற்றறிக்கை சுற்றறிக்கை இல:பிஎஸ்/எஸ்பி/எஸ்பீ/ சி/14/2019

2019 ஏப்பிரல் மாதம் 23 ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
சகல மாகாண பிரதம செயலாளர்களுக்கும்
சகல அரசாங்க அதிபர்கள் / மாவட்டச் செயலாளர்களுக்கும்
சகல ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்
பாராளுமன்ற செயலாளர் நாயகம்

**அரச நிறுவனங்கள் மற்றும் தேசிய கேந்திர நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.**

2019 ஏப்பிரல் மாதம் 21 ஆந் திகதி கொழும்பு மற்றும் ஏனைய இடங்களில் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் சம்பவங்கள் காரணமாக பெருந்திரளான மக்கள் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பெருந்திரளானவர்கள் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர். அதேபோன்று சமய ஸ்தானங்கள் உட்பட பெறுமதி வாய்ந்த சொத்துக்களும் அழிவடைந்துள்ளதுடன், நாட்டின் பொருளாதார செயற்பாடுகளுக்கும் மக்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியினுள் சகல அரச நிறுவனங்களுக்கும் தத்தமது பணியாட்தொகுதியினதும், பொதுமக்களதும் பாதுகாப்பைப் போன்று தேசிய பொருளாதாரத்தின் முக்கிய இடங்களையும் செயற்பாடுகளையும் பாதுகாக்கும் தேசிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகையால் உங்கள் அமைச்சு / நிறுவனத்தின் கீழுள்ள சகல இடங்களிலும் 24 மணித்தியாலயங்கள் பூராகவும் அமுலில் இருக்குமாறு பரந்த வீதத்திலான பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை துரிதமாக ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

அதற்கமைய உங்களது நிறுவனம் மற்றும் உங்களின் கீழுள்ள அனைத்து நிறுவனங்கள், அவற்றின் பணியாட்தொகுதிகள், சேவை பெறுநர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பினையும் நலனையும் உறுதிப்படுத்துவதற்காக உடன்நடைமுறைக்கு வரும்வகையில் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிமேதகு சனாதிபதி அவர்களின் பணிப்பின் பேரில் தெரியப்படுத்துகின்றேன்.

1. ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மீண்டும் மீளாய்வு செய்து நிலவுகின்ற நிலைமையை எதிர்நோக்கக் கூடியவாறு இற்றைப்படுத்தல்.

2. உங்களின் நிருவாகத்தின் கீழுள்ள அத்தியாவசிய சேவை வழங்கும் நிறுவனங்களை அவசர சந்தர்ப்பங்களின் போது துரிதமாகவும், தொடர்ச்சியாகவும் சேவைகளை வழங்கக் கூடியவாறு தயார் நிலையில் வைத்திருத்தல்.

3. தங்களின் நிருவாகத்தின் கீழுள்ள விசேட பாதுகாப்புத் தேவையுடைய இடங்களுக்கு பாதுகாப்புத் துறைகளின் ஒருங்கிணைப்புடன் முழுமையான பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை ஒழுங்கு செய்தல்.

4. திடீர் இடர் நிலைமையின் போது எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதையும், இடர் நிலைமைகள் ஏற்பட்டால் அதற்கான முன்னாயத்தம் தொடர்பாக நிறுவனத்தின் பணியாட்தொகுதியின் ஒவ்வொரு உறுப்பினரையும் அறிவுறுத்தலும், பயிற்றுவித்தலும்.

5. அவசரமான நிலைமையின் போது நிறுவனங்களின் பணியாட்தொகுதி உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வதற்காக அவர்களின் தொடர்பாடல் தகவல்களைப் பேணுதல்.

6. ஏதேனும் சந்தேகப்படக் கூடிய நபர்கள், பொருள்கள் மற்றும் வாகனங்கள் காணப்படுமாயின் அது போன்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கும் பொருட்டு பணியாட்தொகுதிகள் சேவை பெறுநர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவித்தல்.



ගාලු මුවදොර, කොළඹ 01 காலி முகத்திடல், கொழும்பு 01 Galle Face, Colombo 01
දුරකථන தொலைபேசி Telephones ++ 94 (0) 11 2354418 ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් தொலைநகல் Fax ++ 94 11 2446657
ඊ-තැපෑල மின்-அஞ்சல் e-mail prsec@presidentsoffice.lk

7. பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக இயன்றளவு புதிய தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்திக் கொள்ளல்.

8. பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் வகையில் வதந்திகள் பரவுவதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

9. தங்களின் கீழுள்ள சகல நிறுவனங்கள் அவற்றின் பணியாட்தொகுதிகள், சேவை பெறுநர்கள் மற்றும் ஏனைய பொதுமக்கள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்து பாதுகாப்புப் பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுதலும் வேண்டிய சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் பிரிவுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குதலும்.

10. குறிப்பாக நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார நிலையங்கள் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் தொடர்ச்சியாக இயங்குவதை உறுதிப்படுத்தும் பொருட்டு கையாள வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் உபாயங்களையும் கையாளுதலும் அவற்றை தொடர்ந்து தொடராய்வு செய்து கண்காணித்தலும்.

11. அனைத்து நிறுவனங்களிலும் பாதுகாப்பு தொடர்பாக தொடராய்வு செய்வதற்காக பதவியணியினரின் பங்களிப்புடனான தகுந்த “பாதுகாப்பு குழுக்களை” தாபித்து செயற்பாட்டு ரீதியில் அமுல்படும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தலும் அவசர நிலைமைகளின் போது எதிர்கொள்ளக் கூடிய வகையில் பாதுகாப்பு ஒத்திகைகளை நடத்த நடவடிக்கை எடுத்து அதனை தலைவர்கள் கண்காணித்தலும்.

12. நிறுவனத் தலைவர்கள் தமது நிறுவனங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் செயற்திட்டங்களை ஒவ்வொரு வாரத்திலும் மீளாய்வு செய்து சிறந்த கண்காணிப்பு முறையை பேண வேண்டியதுடன் அது தொடர்பாக முன்னேற்ற அறிக்கையொன்றை தொடர்புடைய பாதுகாப்புத் தலைவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

13. இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையில் சகவாழ்வையும், ஒற்றுமையையும் தொடர்ந்து பாதுகாப்பதற்காக அந்தந்த மக்கள் பிரிவுகளின் தலைவர்களுடனும் சமயத் தலைவர்களுடனும் நிதமும் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.

மேற்கூறிய செயற்பாடுகளைத் துரிதமாகவும், செயற்றிறனுடனும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உங்களது பூரணமான ஒத்திழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

ஒப்பம் : **உதய ஆர். செனெவிரத்ன**
சனாதிபதியின் செயலாளர்

**பிரதிகள்:**

1. பிரதமரின் செயலாளர்
2. அமைச்சரவைச் செயலாளர்
3. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
4. முப்படைகளின் தளபதி
5. பொலிஸ் மாஅதிபர்